www.Padasalai.Net www.TrbTnpsc.com

V9T

விருதுநகர் மாவட்டம்

மூன்றாம் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2025

வகுப்பு 9

தமிழ்

கால அளவு : 1.30 மணிநேரம் மதிப்பெண்கள் : 50

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 8×1=8**

1) 'யாமரம்' என்பது எந்த நிலத்தில் வளரும்?

அ) குறிஞ்சி ஆ) மருதம் இ) பாலை ஈ) நெய்தல்

2) 'இம்மைச் செய்தது மறுமைக்கு ஆமெனும்' என்று கூறும் நூல் ________.

அ) திருக்குறள் ஆ) தொல்காப்பியம்

இ) பரிபாடல் ஈ) புறநானூறு

3) 'ஞானம்' என்பதன் பொருள் யாது?

அ) தானம் ஆ) தெளிவு இ) சினம் ஈ) அறிவு

4) வண்ணதாசனுக்கு சாகித்திய அகாதெமி விருது பெற்றுத் தந்த நூல் ________.

அ) ஒரு சிறு இசை ஆ) முன்பின்

இ) அந்நியமற்ற நதி ஈ) உயரப் பறத்தல்

5) இமையத்துக் கோடு உயர்ந்தன்ன - இவ்வடியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் யாது?

அ) கொம்பு ஆ) மலையுச்சி இ) சங்கு ஈ) மேடு

6) குறுந்தொகை ________ பாடல் அடிகளைக் கொண்டது.

அ) 401 ஆ) 586 இ) 236 ஈ) 400

**பாடலைப் படித்து 7,8 ஆகிய வினாக்களுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடுக்க:**

நசை பெரிது உடையர்; நல்கலும் நல்குவர்
பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்
அன்பின் தோழி அவர் சென்ற ஆறே

7) இப்பாடல் இடம்பெற்ற நூல் ________.

அ) அக்கறை ஆ) குறுந்தொகை

இ) யசோதர காவியம் ஈ) ஒலியின் அழைப்பு

8) 'பிடி' என்ற சொல்லின் பொருள் ________.

அ) பெண் யானை ஆ) ஆண் யானை

இ) கரடி ஈ) மந்தி

**II. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி: 3×2=6**

9) கமுகுமரம் எதைத் தேடியது?

10) யசோதர காவியத்தின் பாட்டுடைத் தலைவன் யார்?

11) பிடிபசி களைஇய, பெருங்கை வேழம் - இவ்வடியில் உள்ள இலக்கணக் குறிப்புகளைக் கண்டறிக.

12) பகுத்தறிவு என்றால் என்ன?

13) நினைத்தேன் கவித்தேன் படைத்தேன் சுவைத்தேன் - இத்தொடரில் அமைந்துள்ள உருவகத்தைக் கண்டறிக.

**III. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி: 3×2=6**

14) **கலைச்சொல் தருக:**

அ) Smile ஆ) Font

15) **சொற்றொடரை அடைப்புக்குறிக்குள் உள்ளவாறு மாற்றுக:**

அலறும் மயிலும் கூவும் ஆந்தையும் அகவும் சேவலும் போன்ற இயற்கையின் அழகான ஒலிகளை நாம் நேசிக்க வேண்டும். **(ஒலி மரபுப் பிழைகளைத் திருத்துக)**

Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



16) அகராதியில் காண்க:

அ) ஓதம் ஆ) இருக

17) சொற்றொடர் உருவாக்குக:

அ) அத்தி பூத்தாற் போல

ஆ) மழைமுகம் காணாப் பயிர் போல

18) எழுத்துக்களை முறைப்படுத்திச் சொற்களைக் கண்டுபிடிக்க:

அ) கச்வபஞ்புசிழ்க

ஆ) தைக்விதுகபு

**IV. எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி:**
**(குறிப்பு 24 ஆம் வினாவிற்கு கட்டாயமாக விடையளி)** **4×3=12**

19) உருவக அணியை எடுத்துக்காட்டுடன் எழுதுக.

20) பிறமொழி இலக்கியங்களைத் தழுவி எழுதப்பட்ட தமிழ் இலக்கியங்களைக் குறிப்பிடுக.

21) சிக்கனம் குறித்த பெரியாரின் கருத்துகளை இன்றைய நடைமுறையோடு தொடர்புபடுத்தி எழுதுக.

22) 'பழங்களை விடவும் நசுங்கிப் போனது' - இடம் சுட்டிப்பொருள் விளக்கம் தருக.

23) **அலகிடுக:** கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை

24) ஆக்குவது ஏதெனில் .... எனத் தொடங்கும் யசோதர காவியம் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

**V. விடையளி:** **2×5=10**

25) அ) நீங்கள் விரும்பிப் படித்த நூல் ஒன்றுக்கு மதிப்புரை எழுதுக.

**(அல்லது)**

ஆ) வாரஇதழ் ஒன்றில் படித்த கவிதையை / கதையைப் பாராட்டி அந்த இதழாசிரியருக்கு அஞ்சலட்டையில் கடிதம் எழுதுக.

26) **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக:**



**VI. விடையளி:** **1×8=8**

27) அ) மொழியின் விரல் பிடித்து நடக்கப் பழகிக் கொண்டிருக்கும் தன் மகனுக்கு நா.முத்துக்குமார் எழுதியுள்ள கடிதச் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) வாழ்க்கைப் போரில் வெற்றிபெறுவதற்கான வழிகளைக் கமுகுமரம் வாயிலாக ஆசிரியர் எவ்வாறு உணர்த்துகிறார்?

----------

Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com